(2) சக்கரங்களின் விட்டம் 26 அங்குலத்திற்கு மேற்படாத சிறுவர் வாகனங்கள், வில்பரோ, தனியார் இடங்களில் மாத்திரம் வர்த்தக நோக்கத்துக்காக பயன்படுத்தப்படுகின்ற கை கரத்தை மற்றும் வர்த்தக நோக்கத்துக்காக பயன்படுத்தப்படாத கை கரத்தை என்பன இந்த வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படும்.

09 - 441/4

---

**சிலாபம் நகர சபை**

மதிப்பீட்டு வரி விதித்தல் - 2024

(255 ஆம் அத்தியாயமான) நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 166 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 238 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் நகர சபைக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், சிலாபம் நகர சபையின் தத்துவங்களை பிரயோகிக்கும், கடமைகள், பணிகளை நிறைவேற்றும் சிலாபம் நகர சபையின் செயலாளர் எம். ஏ. எஸ். எஸ். மாரசிங்க ஆகிய நான், குறித்த கட்டளைச் சட்டத்தின் 166 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 252 ஆம் அத்தியாயமான மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 238 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் சிலாபம் நகர சபை அதிகாரப் பிரதேசம் பொருட்டு 2024 ஆம் ஆண்டுக்கு ஏற்புடைய மதிப்பீட்டு வரியை விதித்தலானது பின்வருமாறு அமைதல் வேண்டும் என 2023.07.13 ஆந் திகதிய தீர்மான இலக்கம் 690 இன் கீழ் என்னால் தீர்மானிக்கப்பட்டது என இத்தால் அறிவிக்கின்றேன்.

எம். ஏ. எஸ். எஸ். மாரசிங்க,
செயலாளர் மற்றும் தத்துவங்கள்,
கடமைகள், பணிகளை நிறைவேற்றும் அலுவலர்,
சிலாபம் நகர சபை.

நகர சபை அலுவலகம்,
சிலாபம்,
2023, யூலை 13.

**தீர்மானம்**

(255 ஆம் அத்தியாயமான) நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 166 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 238 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் நகர சபைக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், சிலாபம் நகர சபை அதிகாரப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள எல்லா வீடுகளின், கட்டடங்களின், காணிகளின் மற்றும் சிறுமனைகளின் வருடாந்த பெறுமதியின் பொருட்டு 2023 ஆம் ஆண்டு பொருட்டான மதிப்பீட்டு பெறுமதியை 2024 ஆம் ஆண்டின் மதிப்பீட்டு பெறுமதியாக ஏற்றுக்கொள்வதற்கும்,

குறித்த சட்டத்தின் 160 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் குறித்த சொத்துக்கள் மீது மேற்குறிப்பிடப்பட்ட மதிப்பீட்டின் பொருட்டு வருடாந்த பெறுமதியில் நூற்றுக்கு ஐந்து வீத (5%) வருடாந்த மதிப்பீட்டு வரியொன்றை விதித்தல் வேண்டும் எனவும்,

மேலும், 2024 ஆம் ஆண்டில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு காலாண்டு பொருட்டு முன்னெதிரே காட்டப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் அவ்வாறு குறித்துரைக்கப்பட்டுள்ள வருடாந்த மதிப்பீட்டு வரியை சிலாபம் நகர சபை நிதியத்துக்கு செலுத்துதல் வேண்டும் எனவும், அத்தகைய வருடாந்த மதிப்பீட்டு வரியானது அவ்வாண்டின் சனவரி மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படின் வருடாந்த மதிப்பீட்டு வரிப் பெறுமானத்தில் நூற்றுக்கு பத்து வீத (10%) தள்ளுபடியும், குறித்த அட்டவணையிலுள்ள ஒவ்வொரு காலாண்டுக்கு எதிரேயுள்ள மூன்றாம் நிரலில் காட்டப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் இயைபான காலாண்டின் மதிப்பீட்டு வரித்தொகை சிலாபம் நகர சபை நிதியத்துக்கு செலுத்தப்படின் குறித்த காலாண்டுக்குரிய தொகையில் நூற்றுக்கு ஐந்து வீத (5%) தள்ளுபடியும் சிலாபம் நகர சபையினால் வழங்கப்படுதல் வேண்டும் எனவும் சிலாபம் நகர சபை தீர்மானம் செய்கின்றது.

**அட்டவணை**

| காலாண்டு | செலுத்த வேண்டிய திகதி | 5% கழிவுக்கு தகுதி பெறும் இறுதித் திகதி |
|---|---|---|
| முதலாம் காலாண்டு | 2024.03.31 | 2024.01.31 |
| இரண்டாம் காலாண்டு | 2024.06.30 | 2024.04.30 |
| மூன்றாம் காலாண்டு | 2024.09.30 | 2024.07.31 |
| நான்காம் காலாண்டு | 2024.12.31 | 2024.10.31 |

09 - 441/5

---

**சிலாபம் நகர சபை**

அபிவிருத்தி செய்யப்படாத காணி மீது வரி அறவிடல் - 2024

(255 ஆம் அத்தியாயமான) நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 165(இ) ஆம் உட்பிரிவினால் உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், சிலாபம் நகர சபையின் தத்துவங்களை பிரயோகிக்கும், கடமைகள், பணிகளை நிறைவேற்றும் சிலாபம் நகர சபையின் செயலாளர் எம். ஏ. எஸ். எஸ். மாரசிங்க ஆகிய நான், குறித்த கட்டளைச் சட்டத்தின் 165(இ) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் சிலாபம் நகர சபை அதிகாரப் பிரதேசம் பொருட்டு 2024 ஆம் ஆண்டுக்கு ஏற்புடைய அபிவிருத்தி செய்யப்படாத காணி மீது விதித்தலானது பின்வருமாறு அமைதல் வேண்டும் என 2023.07.13 ஆந் திகதிய தீர்மான இலக்கம் 691 இன் கீழ் என்னால் தீர்மானிக்கப்பட்டது என இத்தால் அறிவிக்கின்றேன்.

எம். ஏ. எஸ். எஸ். மாரசிங்க,
செயலாளர் மற்றும் தத்துவங்கள்,
கடமைகள், பணிகளை நிறைவேற்றும் அலுவலர்,
சிலாபம் நகர சபை.

நகர சபை அலுவலகம்,
சிலாபம்,
2023, யூலை 13.

**தீர்மானம்**

*நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 165(இ) ஆம் உட்பிரிவினால் உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், சிலாபம் நகர சபை அதிகாரப் பிரதேசத்தினுள் காணப்படும் கட்டடம் நிர்மாணிப்பதற்கு அல்லது நிலையாக இல்லையேல் அடிக்கடி செய்கை பண்ணுவதற்கு உகந்த ஏதேனும் காணியில்,*

*(அ) கட்டிடம் எதுவும் நிர்மாணிக்கப்பட்டிராவிடின் ; அல்லது*

*(ஆ) குறித்த காணியில் முறையாக அல்லது நிரந்தரமாக செய்கைக்கு உட்படுத்தப்பட்டிராதவிடத்து ; அல்லது*

*(இ) குறித்த காணியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங்களுக்கு உண்மையாகவே பயன்படுத்தப்பட்டுள்ள நிலப்பரப்பளவு அத்துடன் குறித்த காணியின் முழு நிலப்பரப்பளவுகளுக்கு இடையில் காணப்படும் விகிதாசாரம் 1/5 ஐ விட குறைவாயின்,*

*குறித்த காணியை அபிவிருத்தி செய்யப்படாத காணியாக கருதுவதற்கும், அத்தகைய அபிவிருத்தி செய்யப்படாத காணியாக கருதப்படுகின்ற காணி மீது 2024 ஆம் ஆண்டு பொருட்டு அந்த ஒவ்வொரு காணியின் மூலதன பெறுமானத்தில் 0.25% வருடாந்த வரியொன்றை விதிப்பதற்கும், அத்தகைய அபிவிருத்தி செய்யப்படாத காணி மீதான வரியை 2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் நகர சபைக்கு செலுத்துதல் வேண்டும் எனவும் நான் தீர்மானம் செய்கின்றேன்.*

*09 - 441/6*

---

**சிலாபம் நகர சபை**

சேவைகள் பொருட்டு கட்டணம் அறவிடல் - 2024

*(255 ஆம் அத்தியாயமான) நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 129 மற்றும் 130 ஆகிய பிரிவுகளின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், சிலாபம் நகர சபையின் தத்துவங்களை பிரயோகிக்கும், கடமைகள், பணிகளை நிறைவேற்றும் சிலாபம் நகர சபையின் செயலாளர் எம். ஏ. எஸ். எஸ். மாரசிங்க ஆகிய நான், குறித்த கட்டளைச் சட்டத்தின் 129 மற்றும் 130 ஆகிய பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம், சிலாபம் நகர சபையானது 2024 ஆம் ஆண்டிற்கு ஏற்புடையதாக வழங்கப்படும் சேவைகள் பொருட்டு பின்வருமாறு கட்டணம் அறவிடப்படல் வேண்டும் என 2023.07.13 ஆந் திகதிய தீர்மான இலக்கம் 692 இன் கீழ் என்னால் தீர்மானிக்கப்பட்டது என இத்தால் அறிவிக்கின்றேன்.*

எம். ஏ. எஸ். எஸ். மாரசிங்க,
செயலாளர் மற்றும் தத்துவங்கள்,
கடமைகள், பணிகளை நிறைவேற்றும் அலுவலர்,
சிலாபம் நகர சபை.

*நகர சபை அலுவலகம்,*
*சிலாபம்,*
*2023, யூலை 13.*

**தீர்மானம்**

*255 ஆம் அத்தியாயமான நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 129 மற்றும் 130 ஆகிய பிரிவுகளினால் உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், சிலாபம் நகர சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் பொருட்டு 01 ஆம் அட்டவணையில், 2 ஆம் அட்டவணையில், 3 ஆம் அட்டவணையில் மற்றும் 4 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட கட்டணங்களும், சேவைக் கட்டணங்களும் 2024 ஆம் ஆண்டு பொருட்டு விதிக்கப்படுதல் வேண்டுமென நான் தீர்மானம் செய்கின்றேன்.*

**அட்டவணை 01**

| தொ. இல. | விபரம் | ரூபா சதம் |
|---|---|---|
| 1. | ஏனைய மைதானங்களை வழங்கும் பொருட்டு (ஒரு நாளுக்கு) | 2000.00 |
| | ஏனைய மைதானங்களை வழங்கும் பொருட்டு (அரை நாளுக்கு) | 1250.00 |

**அட்டவணை 01**

| தொ. இல. | விபரம் | ரூபா சதம் |
|---|---|---|
| | இசைக் கச்சேரி அல்லது ஏனைய பண்டிகை பொருட்டு | 5000.00 |
| | கானிவல் நடாத்தும் பொருட்டு (ஒரு நாளுக்கு) | 5000.00 |
| | நகர எல்லைக்குள் விற்பனை மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டமொன்று பொருட்டு (ஒரு நாளுக்கு) | 3000.00 |
| | தற்காலிக விற்பனைக்கூடமொன்று பொருட்டு ஒரு நாளுக்கு (ஒரு சதுர அடிக்கு) | 5.00 |
| 2. | தனியார் பஸ் தரிப்பிடத்தில் பயண ஒழுங்கு பொருட்டு பஸ்வண்டி நிறுத்திவைக்கும் கட்டணம் | |
| | 35 ஆசனங்களுக்கு குறைந்த பஸ்வண்டி பொருட்டான கட்டணம் (மாதாந்தம்) | 1750.00 |
| | 35 ஆசனங்களுக்கு மேற்பட்ட பஸ்வண்டி பொருட்டான கட்டணம் (மாதாந்தம்) | 1950.00 |
| 3. | **ஹரிந்திர கொரயா மைதானம் பொருட்டான கட்டணம் அறவிடுதல்** | |
| | பாடசாலை விளையாட்டுப் போட்டிகள் | |
| | நகர எல்லைக்குள் உள்ள பாடசாலை போட்டியொன்று | இலவசம் |
| | நகர எல்லைக்கு வெளியில் உள்ள பாடசாலை போட்டியொன்று | 2000.00 |
| | பாடசாலை அல்லாத போட்டியொன்று | 2000.00 |
| | மென்பந்து கிரிக்கற் போட்டியொன்று பொருட்டு (ஒரு நாளுக்கு) | 2000.00 |
| | மென்பந்து கிரிக்கற் சுற்றுப்போட்டியொன்று பொருட்டு | 3500.00 |
| | லெதர்பந்து கிரிக்கற் போட்டியொன்று பொருட்டு (ஒரு நாளுக்கு) | 3000.00 |
| | லெதர்பந்து கிரிக்கற் சுற்றுப்போட்டியொன்று பொருட்டு | 5000.00 |
| | உதைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், எல்லே, வலைப்பந்தாட்ட போட்டியொன்று பொருட்டு (ஒரு நாளுக்கு) | 2000.00 |
| | அரசாங்க பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி பொருட்டு (ஒரு நாளுக்கு) | 1500.00 |
| | தனியார்/சர்வதேச பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி பொருட்டு (ஒரு நாளுக்கு) | 3500.00 |
| | வணிக நிறுவன விளையாட்டுப் போட்டி பொருட்டு (ஒரு நாளுக்கு) | 7500.00 |
| | செப/இறை வழிபாடு பொருட்டு (ஒரு நாளுக்கு) | 2000.00 |
| | நகர சபை அதிகாரப் பிரதேசத்தினுள் பதிவு செய்த விளையாட்டுக் கழகமொன்று பொருட்டு (ஒரு நாளுக்கு) | 2000.00 |
| | விளையாட்டு மைதானம் பொருட்டான நீர் மற்றும் மின்சாரக் கட்டணம் (ஒரு நாளுக்கு) | 500.00 |

**அட்டவணை 02**

| தொ. இல. | விபரம் | செலுத்த வேண்டிய கட்டணம் ரூபா சதம் |
|---|---|---|
| **1.** | மீன் சந்தை கட்டணம் அறிவிடுதல் | |
| | கட்டு வலை தோணி பொருட்டான வருடாந்த கட்டணம் | 1000.00 |
| | சிறிய மீன்பிடி படகு பொருட்டான வருடாந்த கட்டணம் (நகர எல்லைக்குள்) | 1500.00 |
| | சிறிய மீன்பிடி படகு பொருட்டான வருடாந்த கட்டணம் (நகர எல்லைக்கு வெளியே) | 2500.00 |
| | தெப்பம் பொருட்டான வருடாந்த கட்டணம் (நகர எல்லைக்குள்) | 500.00 |
| | தெப்பம் பொருட்டான வருடாந்த கட்டணம் (நகர எல்லைக்கு வெளியே) | 1000.00 |
| | தெப்பம் பொருட்டான வருடாந்த கட்டணம் (நகர எல்லைக்கு வெளியே) | 1000.00 |
| | பலநாள் மீன்பிடி படகு பொருட்டான வருடாந்த கட்டணம் | 4000.00 |
| | 2024.03.31 ஆந் திகதியின் பின் மீன்பிடி உத்தரவுப்பத்திரம் பெற்றுக்கொள்ளாத கடற்றொழிலாளர்களிடமிருந்து சேகரிக்கும் தொகை | 200.00 |
| 2. | மதிப்பீட்டு வரி ஆவணத்தில் பெயர் மாற்றல் படிவக் கட்டணம் | 150.00 |
| 3. | நகர சபை எல்லைக்குள் பொது மலசலகூட சேவை பொருட்டு | 20.00 |
| 4. | ரிதிவெல்ல குளிக்கும் இடத்தில் குளிப்பதற்காக (ஒரு ஆளுக்கு) | 100.00 |
| **5.** | **சிலாபம் பொது மயான பூமியில் புதைப்பதற்கான கட்டணம்** | |
| | ● வளர்ந்தோர் ஒருவரின் சடலத்தை புதைப்பதற்காக | 500.00 |
| | ● சிறுவர் ஒருவரின் (வயதுக்கு குறைந்த) சடலத்தை புதைப்பதற்காக | 250.00 |

**அட்டவணை 02** *(தொடர்ச்சி)*

| *தொ. இல.* | *விபரம்* | *செலுத்த வேண்டிய கட்டணம் ரூபா சதம்* |
|---|---|---|
| 6. | சிலாபம் பொது மயான பூமியில் கல்லறைக் கல்லுக்கான கட்டணம் (ஒரு சதுர அடிக்கு) | 2000.00 |
| 7. | அதிகாரப் பிரதேசத்தினுள் வசிப்பவர் ஒருவரின் சடலத்தை எரிப்பதற்காக தகனச்சாலையை வழங்குதல் | 13500.00 |
| | அதிகாரப் பிரதேசத்திற்கு வெளியே வசிப்பவர் ஒருவரின் சடலத்தை எரிப்பதற்காக தகனச்சாலையை வழங்குதல் | 14500.00 |
| **08.** | **பொது நூலக கட்டணம் அறவிடுதல்** | |
| | 1. நூலக விண்ணப்பப்படிவக் கட்டணம் | 20.00 |
| | 2. உறுப்பினர் சேர்த்தல் - 12 வயதுக்கு மேல் | 100.00 |
| | 3. சிறுவர் உறுப்பினர் கட்டணம் - 12 வயதுக்கு மேல் | 50.00 |
| | 4. தாமதக் கட்டணம் (ஒரு நாளுக்கு) | 1.00 |
| | 5. தாமதக் கட்டணம் 31 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை | 40.00 |
| | 6. தாமதக் கட்டணம் 91 நாட்கள் முதல் 180 நாட்கள் வரை | 80.00 |
| | 7. தாமதக் கட்டணம் 180 நாட்களுக்கு மேல் | 100.00 |
| | **நூலக உறுப்புரிமையை புதுப்பிக்கும் பொருட்டு** | |
| | 08. உறுப்புரிமையை புதுப்பித்தல் - 12 வயதுக்கு மேல் | 50.00 |
| | 09. சிறுவர் உறுப்புரிமையை புதுப்பித்தல் - 12 வயதுக்கு கீழ் | 25.00 |
| | 10. A4 தனிப்பக்க ஒளிப்படப் பிரதிக் கட்டணம் | 10.00 |
| | 11. A4 இருபக்க ஒளிப்படப் பிரதிக் கட்டணம் | 20.00 |
| | 12. கருப்பு வெள்ளை அச்சிட்ட பிரதிக் கட்டணம் | 30.00 |
| | 13. வர்ண அச்சிட்ட பிரதிக் கட்டணம் | 60.00 |
| | 14. A3 தனிப்பக்க ஒளிப்படப் பிரதிக் கட்டணம் | 30.00 |
| | 15. A3 இருபக்க ஒளிப்படப் பிரதிக் கட்டணம் | 40.00 |
| | 16. legal தனிப்பக்க ஒளிப்படப் பிரதிக் கட்டணம் | 25.00 |
| | 17. legal இருபக்க ஒளிப்படப் பிரதிக் கட்டணம் | 30.00 |
| | 18. B5 ஒளிப்படப் பிரதிக் கட்டணம் | 10.00 |
| | 19. நிலையான வைப்புக் கட்டணம் நகர சபை அதிகாரப் பிரதேசத்திற்கு வெளியிலுள்ளோர் பொருட்டு | 1000.00 |
| | 20. இணைய வசதி 1 மணித்தியாலத்திற்கு | 150.00 |
| 09. | நிரந்தர விளம்பர பலகை பொருட்டு ஒரு சதுர அடிக்கு (வருடாந்தம்) | 200.00 |
| | ஒளியூட்டப்பட்ட பலகை பொருட்டு ஒரு சதுர அடிக்கு (வருடாந்தம்) | 500.00 |
| | கட்அவுட் காட்சிப்படுத்தும் பொருட்டு ஒரு சதுர அடிக்கு (03 மாத) | 100.00 |
| | பதாகை/கொடி பொருட்டு ஒரு சதுர அடிக்கு (03 மாத) | 50.00 |
| | பதாகை/கொடி தற்காலிகமாக காட்சிப்படுத்தல் (ஆகக் கூடிய 03 நாட்களுக்கு) ஒரு சதுர அடிக்கு | 50.00 |
| 10. | தெருவெல்லை சான்றிதழ் ஒன்றை வழங்குவதற்கான கட்டணம் | 1000.00 |
| 11. | **புல்வெட்டும் பொறியை வாடகைக்கு வழங்குதல்** | |
| | பாடசாலைகள் பொருட்டு 01 மணித்தியாலத்துக்கு | 4000.00 |
| | பொது நிறுவனங்கள் பொருட்டு 01 மணித்தியாலத்துக்கு | 6000.00 |
| | அதிகாரப் பிரதேசத்திற்கு வெளியிலான இடங்கள் பொருட்டு போக்குவரத்துக்கு 01 கி. மீ. க்கு | 400.00 |

**16.** **வாகன தரிப்பிடம், மீன் சந்தை, மரக்கறி சந்தை, மலசலகூடம், வாகன அனுமதிப்பத்திரம் மற்றும் சத்துட்டு உயன என்பன பொருட்டு கட்டணம் அறவிடுதல்**

**01. வாகன தரிப்பிடம் பொருட்டு கட்டணம் அறவிடுதல்**

| தொடர் இல. | I ஆம் நிரல் | II ஆம் நிரல் (ரூ.) |
|---|---|---|
| 01 | கனரக வாகனம் ஒன்றுக்கு | 100.00 |
| 02 | இலகு வாகனம் ஒன்றுக்கு | 50.00 |
| 03 | மிதி வண்டி ஒன்றுக்கு | 20.00 |
| 04 | சைக்கிள் ஒன்றுக்கு | 10.00 |

**02. தனியார் பஸ் தரிப்பிடம் பொருட்டு கட்டணம் அறவிடுதல் (பஸ் வண்டி நிறுத்தி வைக்கும் நாளாந்த கட்டணம்)**

| தொடர் இல. | I ஆம் நிரல் | II ஆம் நிரல் (ரூ.) |
|---|---|---|
| 01 | 35 ஆசனங்களுக்கு மேற்பட்ட பஸ் வண்டி பொருட்டு | 120.00 |
| 02 | 35 ஆசனங்களுக்கு குறைந்த பஸ் வண்டி பொருட்டு | 100.00 |

**03. மரக்கறி சந்தை பொருட்டு கட்டணம் அறவிடுதல்**

| தொடர் இல. | I ஆம் நிரல் | II ஆம் நிரல் (ரூ.) |
|---|---|---|
| 01 | மரக்கறி சந்தை ஒரு சதுர அடிக்கு (நாளாந்தம்) | 3.00 |

**04. மீன் சந்தை பொருட்டு கட்டணம் அறவிடுதல்**

| தொடர் இல. | I ஆம் நிரல் | II ஆம் நிரல் (ரூ.) |
|---|---|---|
| 01 | சில்லறைக்கு மீன் விற்கும் ஒரு நபரிடமிருந்து | 50.00 |
| 02 | மீன் பெட்டி எடுத்துச் செல்வதற்கு வரும் மிதி வண்டி ஓட்டும் ஒரு நபரிடமிருந்து (ஒரு பெட்டிக்கு) | 50.00 |
| 03 | மீன் பெட்டி எடுத்துச் செல்வதற்கு வரும் மிதி வண்டி ஓட்டும் ஒரு நபரிடமிருந்து (வியாபாரியிடமிருந்து ஒரு பெட்டிக்கு) | 50.00 |
| 04 | மீன் பெட்டி எடுத்துச் செல்வதற்கு லொறிகளில் வரும் ஒரு நபரிடமிருந்து (ஒரு பெட்டிக்கு) | 50.00 |
| 05 | மீன் வெட்டும் ஒரு நபரிடமிருந்து | 100.00 |
| 06 | கருவாடு பொருட்டு மீன் வாங்கும் ஒரு நபரிடமிருந்து | 100.00 |
| 07 | நிரந்தர மொத்த வியாபாரிகளிடமிருந்து ஒரு சதுர அடிக்கு (நாளாந்தம்) | 3.00 |

**05. இரவு நேர சந்தையில் வியாபாரம் செய்வதற்கான கட்டணம்**

| தொடர் இல. | I ஆம் நிரல் | II ஆம் நிரல் (ரூ.) |
|---|---|---|
| 01 | இரவு நேர சந்தை ஒரு சதுர அடிக்கு (நாளாந்தம்) | 5.00 |

**06. வாடகை பயணம் பொருட்டு கட்டணம் அறவிடுதல்**

| தொடர் இல. | I ஆம் நிரல் | II ஆம் நிரல் (ரூ.) |
|---|---|---|
| 01 | முச்சக்கர வண்டி வருடாந்த அனுமதிப்பத்திரம் | 500.00 |
| | முச்சக்கர வண்டி அனுமதிப்பத்திர புதுப்பித்தல் கட்டணம் (3 வருடங்களுக்கு மேல்) | 7500.00 |
| | முச்சக்கர பயண உரித்து மாற்றல் கட்டணம் | 5000.00 |
| 02 | வான் பொருட்டான வருடாந்த அனுமதிப்பத்திரம் | 2000.00 |
| 03 | மோட்டார் சைக்கிள் பொருட்டான வருடாந்த அனுமதிப்பத்திரம் | 100.00 |
| 04 | துவிச்சக்கர வண்டி பொருட்டான வருடாந்த அனுமதிப்பத்திரம் | 5.00 |

**07. சத்துட்டு உயன கட்டணம் அறவிடுதல்**

| தொடர் இல. | I ஆம் நிரல் | II ஆம் நிரல் (ரூ.) |
|---|---|---|
| 01 | நுழைவுக் கட்டணம் 12 வயதுக்கு குறைந்த | இலவசம் |
| | நுழைவுக் கட்டணம் 12 வயதுக்கு மேல் | 20.00 |
| 02 | விளையாட்டு புகையிரதம் பொருட்டு கட்டணம் அறவிடுதல் | |
| | 3 - 12 வயதுக்கு உட்பட்டோர் கட்டணம் | 50.00 |
| | 12 வயதுக்கு மேற்பட்டோர் கட்டணம் | 100.00 |

**அட்டவணை 03**

01. **தீ பாதுகாப்பு தொடர்பான பிரயோக நடைமுறை**

| தொ. இல. | நிரல் I | நிரல் II ரூபா சதம் |
|---|---|---|
| 1. | வளவாளர் கட்டணம் (அரச நிறுவனங்கள் பொருட்டு) ஒரு மணித்தியாலத்திற்கு | 1000.00 |
| 2. | வளவாளர் கட்டணம் (பகுதியளவு அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் பொருட்டு) | 8500.00 |
| 3. | தீயணைப்பு வண்டி பொருட்டான கட்டணம் (1 கி.மீ. பொருட்டு) | 400.00 |
| 4. | போக்குவரத்துக் கட்டணம் (1 கி.மீ. பொருட்டு போவதற்கும் வருவதற்கும்) | 150.00 |
| 5. | திணைக்கள கட்டணம் | 30% |

02. **வருடாந்த தீ பாதுகாப்பு மற்றும் விடுவிப்புச் சான்றிதழ் வழங்குதல்**

| | | |
|---|---|---|
| 1. | அரச நிறுவனங்கள் பொருட்டு (நகர எல்லைக்குள்) | 5000.00 |
| 2. | அரச நிறுவனங்கள் பொருட்டு (நகர எல்லைக்கு வெளியே) | 15000.00 |
| 3. | தனியார் அல்லது பகுதியளவு அரச நிறுவனங்கள் பொருட்டு (நகர எல்லைக்குள்) | |

மதிப்பீட்டுப் பெறுமதி ரூ.

| | | | |
|---|---|---|---|
| 1,000.00 | - | 10,000.00 | 1000.00 |
| 10,001.00 | - | 50,0000.00 | 2000.00 |
| 50,001.00 | - | 100,000.00 | 3000.00 |
| 100,001.00 | - | 200,000.00 | 5000.00 |
| 200,001.00 | - | 500,000.00 | 6000.00 |
| 500,001.00 | - | 1000,000 | 8000.00 |
| 1000,000க்கு மேல் | | | 10,000.00 |

| தொ. இல. | நிரல் I | நிரல் II<br>ரூபா சதம் |
|---|---|---|
| 4. | தனியார் அல்லது பகுதியளவு அரச நிறுவனங்கள் பொருட்டு (நகர எல்லைக்கு வெளியே) | |
| | சிறிய அளவு (2500 சதுர அடி வரை) | 8,000.00 |
| | நடுத்தர அளவு (2500-5000 சதுர அடி வரை) | 10,000.00 |
| | பாரிய அளவு (5000 சதுர அடிக்கு மேல்) | 15,000.00 |
| 5. | போக்குவரத்துக் கட்டணம் (1 கி.மீ. பொருட்டு) | 150.00 |

பரிசோதனை அலுவலர் மற்றும் உதவி அலுவலர் பொருட்டு அரசாங்க நிருவாக சுற்றறிக்கை மற்றும் தாபனவிதிக் கோவையின் நியதிகளின்படி உரிய கட்டணம் அறவிடப்படும்.

**03. நிறுவனங்களில் தீ பாதுகாப்பு தொடர்பாக இணக்கச் சான்றிதழ் வழங்குதல்**

| தொ. இல. | நிரல் I | நிரல் II<br>ரூபா சதம் |
|---|---|---|
| 1. | இயைபான வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட சதுர அடி 1 க்கு | 1.00 |
| 2. | திணைக்களக் கட்டணம் | 30% |

பரிசோதனை அலுவலர் மற்றும் உதவி அலுவலர் பொருட்டு அரசாங்க நிருவாக சுற்றறிக்கை மற்றும் தாபனவிதிக் கோவையின் நியதிகளின்படி உரிய கட்டணம் அறவிடப்படும்.

**04. தீயணைக்கும் சேவைக் கட்டணங்கள்**
**வீடுகள்**

| தொ. இல. | நிரல் I | நிரல் II<br>ரூபா சதம் |
|---|---|---|
| 1. | நகர எல்லைக்குள் வெளியே 2500 சதுர அடிக்கு குறைந்த | 3000.00 |
| 2. | நகர எல்லைக்கு வெளியே 2500 சதுர அடிக்கு மேல் | 6000.00 |
| 3. | தீயணைப்பதற்காக பங்கு பற்றும் அலுவலரொருவருக்கு ஒரு மணித்தியாலத்திற்கு சேவைக் கட்டணம் | 300.00 |
| 4. | பராமரிப்புச் செலவு | மொத்த சேவைக் கட்டணத்திற்கு மேலதிகமாக 10% |

**05. நகர எல்லைக்குள் பகுதியளவு அரச மற்றும் வியாபார இடங்கள்**

| தொ. இல. | நிரல் I | நிரல் II<br>ரூபா சதம் |
|---|---|---|
| 1. | தீ பாதுகாப்புச் சான்றிதழ் கொண்ட நிறுவனத்திற்கு நீர் பவுசர் ஒன்று பொருட்டு | 2000.00 |
| 2. | தீ பாதுகாப்புச் சான்றிதழ் கொண்டிராத நிறுவனத்திற்கு நீர் பவுசர் ஒன்று பொருட்டு | 3500.00 |
| 3. | பராமரிப்புச் செலவு | 10% |

**06. நகர எல்லைக்கு வெளியே பகுதியளவு அரச மற்றும் வியாபார இடங்கள்**

தீயணைக்கும் கூறின் சான்றிதழ் பெற்ற நிறுவனங்கள் ஆரம்பக் கட்டணத்திலிருந்து விடுவிக்கப்படுவதுடன், மேலதிக நீர் பவுசர் ஒன்று பொருட்டு ரூபா 3,500.00 தொகையும் நியம போக்குவரத்துக் கட்டணமும் அறவிடப்படும்.

| தொ. இல. | நிரல் I | நிரல் II<br>ரூபா சதம் |
|---|---|---|
| 1. | நகர எல்லைக்கு வெளியே 2500 சதுர அடிக்கு குறைந்த வியாபார நிலையமொன்று பொருட்டு | 8000.00 |
| 2. | நகர எல்லைக்கு வெளியே 2500 - 10000 சதுர அடிக்கு இடையில் வியாபார நிலையமொன்று பொருட்டு | 10000.00 |
| 3. | நகர எல்லைக்கு வெளியே 10000சதுர அடிக்கு மேல் வியாபார நிலையமொன்று பொருட்டு | 15000.00 |
| 4. | மேலதிக நீர் பவுசர் பொருட்டு | 3500.00 |
| 5. | தீயணைக்கும் வண்டி பொருட்டு கட்டணங்கள் (1 கி.மீ. பொருட்டு) | 400.00 |
| 6. | தீயணைப்பதற்காக பங்கு பற்றும் அலுவலரொருவருக்கு ஒரு மணித்தியாலத்திற்கு சேவைக் கட்டணம் | 300.00 |
| 7. | பராமரிப்புச் செலவு | 10% |

தீயணைக்கும் நீர் பவுசர்களுக்கு மேலதிகமாக முதன்மையான தீயணைக்கும் உபகரணங்கள் பயன்படுத்தப்படுமாயின் அதற்காக அறவிடப்படும் சேவைக் கட்டணம் வருமாறு

| தொ. இல. | நிரல் I | நிரல் II<br>ரூபா சதம் |
|---|---|---|
| 1. | காபனீரொட்சைட்டு 5 KG சிலிண்டர் ஒன்று பொருட்டு | 14000.00 |
| 2. | உலர் இரசாயன தூள் 6 KG சிலிண்டர் ஒன்று பொருட்டு | 11000.00 |
| 3. | நுரை 9 KG சிலிண்டர் ஒன்று பொருட்டு | 8400.00 |

**அட்டவணை 04**

**திண்மக் கழிவு பொருள்களை அகற்றுவதற்கான சேவைக் கட்டணம் - 2024**

| தொடர் இல. | நிரல் 1 | நிரல் II<br>ரூ. ச. |
|---|---|---|
| 01 | வீதியொன்றுக்கு அல்லது பாதையொன்றுக்கு அருகில் மரம் அல்லது மரத்தின் ஒரு பகுதி வெட்டப்பட்டிருக்குமிடத்து அதனை அகற்றுவதற்காக ட்ரேலர் (இழுவை) 01 பொருட்டு அலுவலகத்திலிருந்து 2 கி.மீ. தூரத்துக்கு ஒரு தடவைக்கு | 3,000.00 |
| | வீதியொன்றுக்கு அல்லது பாதையொன்றுக்கு அருகில் மரம் அல்லது மரத்தின் ஒரு பகுதி வெட்டப்பட்டிருக்குமிடத்து அதனை அகற்றுவதற்காக ட்ரேலர் (இழுவை) 1/2 பொருட்டு அலுவலகத்திலிருந்து 2 கி.மீ. தூரத்துக்கு ஒரு தடவைக்கு | 2,000.00 |
| | அதிகரிக்கும் ஒவ்வொரு 01 கி.மீ. க்கும் | 400.00 |
| 02 | அகழ்தல் நிர்மாணம் மற்றும் உடைப்பதன் மூலம் அகற்றப்படுகின்ற கழிவுப்பொருட்கள் ட்ரேலர்( இழுவை) 01 பொருட்டு அலுவலகத்திலிருந்து 2 கி.மீ. தூரத்துக்கு ஒரு தடவைக்கு | 5,000.00 |
| | அகழ்தல் நிர்மாணம் மற்றும் உடைப்பதன் மூலம் அகற்றப்படுகின்ற கழிவுப் பொருட்கள் ட்ரேலர் (இழுவை) 1/2 பொருட்டு அலுவலகத்திலிருந்து 2 கி.மீ. தூரத்துக்கு ஒரு தடவைக்கு | 3,000.00 |
| | அதிகரிக்கும் ஒவ்வொரு 01 கி.மீ. க்கும் | 400.00 |

**சுகாதாரப் பிரிவினால் அறவிடப்படுகின்ற சேவைக் கட்டணம்**

| தொ. இல. | கட்டண வகைகள் | வரி சதவீதம் அல்லது அறவிடப்படும் தொகை<br>சதவீதம் % | தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 01. | சாக்கடை பவுசர் சேவை வழங்குவதற்காக ஒரு பயண ஒழுங்கு பொருட்டு நகரத்தினுள் உள்ள வீடுகள் பொருட்டான கட்டணம் | - | 4000.00 |

| தொ. இல. | கட்டண வகைகள் | வரி சதவீதம் அல்லது அறவிடப்படும் தொகை சதவீதம் % | தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 02. | சாக்கடை பவுசர் சேவை வழங்குவதற்காக ஒரு பயண ஒழுங்கு பொருட்டு நகரத்தினுள் உள்ள அரச நிறுவனங்கள் பொருட்டான கட்டணம் | - | 8000.00 |
| 03. | சாக்கடை பவுசர் சேவை வழங்குவதற்காக ஒரு பயண ஒழுங்கு பொருட்டு நகரத்தினுள் உள்ள வியாபார நிலையங்கள் பொருட்டான கட்டணம் | - | 6000.00 |
| 04. | சாக்கடை பவுசர் சேவை வழங்குவதற்காக ஒரு பயண ஒழுங்கு பொருட்டு நகரத்தினுள் உள்ள வழிபாட்டு தலங்கள் பொருட்டான கட்டணம் | - | 2000.00 |
| 05. | சாக்கடை பவுசர் சேவை வழங்குவதற்காக ஒரு பயண ஒழுங்கு பொருட்டு நகரத்திற்கு வெளியே உள்ள வீடுகள் பொருட்டான கட்டணம் (1 கி. மீக்கு ரூ. 100 வீதம் செல்வதற்கும் வருவதற்கும் கட்டணம் அறவிடப்படும்) | - | 7500.00 + தூரத்துக்கு ஏற்ப கட்டணம் |
| 06. | சாக்கடை பவுசர் சேவை வழங்குவதற்காக ஒரு பயண ஒழுங்கு பொருட்டு நகரத்திற்கு வெளியே உள்ள வியாபார நிலையங்கள் பொருட்டான கட்டணம் (1 கி. மீக்கு ரூ. 400 வீதம் செல்வதற்கும் வருவதற்கும் கட்டணம் அறவிடப்படும்) | - | 8000.00 + தூரத்துக்கு ஏற்ப கட்டணம் |
| 07. | சாக்கடை பவுசர் சேவை வழங்குவதற்காக ஒரு பயண ஒழுங்கு பொருட்டு நகரத்திற்கு வெளியே உள்ள அரச நிறுவனங்கள் பொருட்டான கட்டணம் (1 கி. மீக்கு ரூ. 400 வீதம் செல்வதற்கும் வருவதற்கும் கட்டணம் அறவிடப்படும்) | - | 8000.00 + தூரத்துக்கு ஏற்ப கட்டணம் |
| 08. | சாக்கடை பவுசர் சேவை வழங்குவதற்காக ஒரு பயண ஒழுங்கு பொருட்டு நகரத்திற்கு வெளியே உள்ள வழிபாட்டுத் தளங்கள் பொருட்டான கட்டணம் (1 கி. மீக்கு ரூ. 400 வீதம் செல்வதற்கும் வருவதற்கும் கட்டணம் அறவிடப்படும்) | - | 2000.00 + தூரத்துக்கு ஏற்ப கட்டணம் |
| 09. | 4000 லீற்றர் நீர் இன்றி பவுசர் கட்டணம் (1 கி. மீ. க்கு ரூ. 400.00 வீதம்) செல்வதற்கும் வருவதற்கும் கட்டணம் அறவிடப்படும்) | - | 1200.00 + தூரத்துக்கு ஏற்ப கட்டணம் |
| | 4000 லீற்றர் நீர் இன்றி பவுசர் 12 மணித்தியாலங்கள் தரித்து வைத்தல் கட்டணம் | - | 500.00 |
| | 4000 லீற்றர் நீர் இன்றி பவுசர் 01 நாள் தரித்து வைத்தல் கட்டணம் | - | 1000.00 |
| 10. | 6000 லீற்றர் நீர் இன்றி பவுசர் கட்டணம் (1 கி. மீ. க்கு ரூ. 400.00 வீதம்) செல்வதற்கும் வருவதற்கும் கட்டணம் அறவிடப்படும்) | - | 2000.00 |
| 11. | வேறு நிறுவனங்களிலிருந்து மலம் சுத்திகரிப்பு கூறுக்கு இடும் கழிவுப் பொருட்கள், 3000 லீற்றர் திராக்டர் பவுசர் ஒன்று பொருட்டான கட்டணம் | - | 500.00 |
| 12. | வேறு நிறுவனங்களிலிருந்து மலம் சுத்திகரிப்பு கூறுக்கு இடும் கழிவுப் பொருட்கள், 5000 லீற்றர் லொறி பவுசர் ஒன்று பொருட்டான கட்டணம் | - | 750.00 |
| 13. | மலம் சுத்திகரிப்பு கூறில் பசளை கியுப் ஒன்று விற்பதற்கான கட்டணம் | - | 2500.00 |
| 14. | தற்காலிக கொல்களம் கட்டணம் | - | 1000.00 |
| 15. | கொடி கம்பம் 2"GI (20 அடி நீளம்) ஒன்று வழங்குவதற்கான கட்டணம் ஒரு நாளுக்கு | - | 20.00 |

***சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் - 2024***

*1. சுற்றாடல் அனுமதிப்பத்திர படிவக் கட்டணம்*

| | | |
|---|---|---|
| (i) | புதிய படிவம் பொருட்டு | ரூ. 100.00 |
| (ii) | புதுப்பிக்கும் படிவம் பொருட்டு | ரூ.50.00 |

*2. சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணம்*

| | | |
|---|---|---|
| (i) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | ரூ.1250.00 |

*3. சோதனைக் கட்டணம்*

| | முதலீடு (ரூ.) | | | சோதனைக் கட்டணம் (ரூ.) |
|---|---|---|---|---|
| (i) | 100,000.00 | - | வரை | 1000.00 |
| (ii) | 100,001.00 | - | 200,000.00 | 1500.00 |
| (iii) | 200,001.00 | - | 500,000.00 | 2500.00 |
| (iv) | 500,001.00 | - | 1000,000.00 | 5000.00 |
| (v) | 1000,001.00 | - | 1500,000.00 | 7500.00 |
| (v) | 1500,000.00 க்கு மேல் | | | 10,000.00 |

**சேவைக் கட்டணம் அறவிடல் - கைத்தொழில் பிரிவு**

| | |
|---|---|
| 01. அபிவிருத்தி உத்தரவுப் பத்திரங்களை வழங்கும் முகமாக செயற்பாட்டுக் கட்டணம் அறவிடுதல் | 2021.07.08 ஆந் திகதிய 2235/54 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிஷேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் அறவிடப்படும். |
| 02. பசுமை கட்டட சான்றிதழ் பொருட்டு கட்டணம் அறவிடுதல் | |
| 03. தொடர் நடவடிக்கை மற்றும் அவதானிப்புக்கள் பற்றிய அறிக்கை பொருட்டு கட்டணம் அறவிடுதல் | |
| 04. தழுவு அங்கீகாரம் வழங்கும் முகமாக கட்டணம் அறவிடுதல். (செயற்பாட்டுக் கட்டணத்துக்கு மேலதிகமாக) | |
| 05. இணக்கச் சான்றிதழ் வழங்கும் முகமாக கட்டணம் அறவிடுதல். | |
| 06. பாவனையை மாற்றுவதற்கான சேவைக் கட்டணம் அறவிடுதல் | |

*09 - 441/7*

## இரத்தினபுரி மாநகர சபை

*விளம்பர அறிவித்தல்கள் மற்றும் பார்வைச் சுற்றாடல்களுக்கான வரி விதித்தலை திருத்தம் செய்தல் -2023*

*இரத்தினபுரி மாநகர சபையினால் 2022.12.30 ஆந் திகதி 2312 ஆம் இலக்கமுடைய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டிற்கான விளம்பர அறிவித்தல்கள் மற்றும் பார்வைச் சுற்றாடல்களுக்கான வரி விதித்தல் தொடர்பான அறிவித்தல் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தம் செய்வதற்கு 2023.07.19 ஆந் திகதி நடைபெற்ற நடவடிக்கைகள் மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் 03 ஆம் இலக்கப் பிரேரணையின் கீழ் அங்கீகரிக்கப்பட்டது என்பதை பொதுமக்களிடம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*252 ஆம் அத்தியாயமான மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 267 ஆம் பிரிவுகளின் மூலம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி 1989 ஆம் ஆண்டு சனவரி மாதம் 20 ஆம் திகதி வெளியிடப்பட்ட 541/17 ஆம் இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் IV(ஆ) பகுதியில் உள்ளூராட்சி வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை கௌரவ அமைச்சர் அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்டு 1999 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 24 ஆம் திகதியுடைய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பொதுத் துணைவிதியின் 90A II ஆம் பகுதியில் விளம்பர அறிவித்தல்கள் மற்றும் பார்வைச் சுற்றாடல்கள் தொடர்பான அட்டவணையைத் திருத்தம் செய்யும் ஏற்பாடுகளின் பிரகாரம் இரத்தினபுரி மாநகர சபை எல்லைக்குள் எந்தவொருவராலும் ஏதாவதொரு வீதியொன்றிற்கு, பாதையொன்றிற்கு, ஓடையொன்றிற்கு அல்லது குளமொன்றிற்குக் காட்சியளிக்கக்கூடியவாறு எந்தவொரு அறிவித்தலும், மாநகர சபையின் ஆணையாளரால் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரமொன்றின் அதிகாரத்தின் கீழேயே தவிர காட்சியளிக்கச் செய்யப்படாதிருத்தல் வேண்டும்.*

*வீ. அருண என் பிரேமரத்ன,*
*நகர ஆணையாளர்,*
*அதிகாரங்கள் மற்றும் பணிகளைச் செயற்படுத்தும் அலுவலர்,*
*இரத்தினபுரி மாநகர சபை.*

*மாநகர சபை அலுவலகம்,*
*இரத்தினபுரி,*
*2023, யூலை 31.*

### அட்டவணை

| | | ரூ. சதம் |
|---|---|---|
| 01. | தற்காலிக விளம்பர அறிவித்தல்கள், பெனர்கள் காட்சியளிக்கச் செய்தல் ( 01 சதுர அடி 14 நாட்கள் காட்சியளிக்கச் செய்வதற்காக) | 60.00 |
| 02. | நிரந்தர அறித்தல் பலகைகள் நிறுவனச் சுற்றாடலில் காட்சியளிக்கச் செய்தல் (01 சதுர அடி ஒரு வருடகாலம் காட்சியளிக்கச் செய்வதற்காக) | 150.00 |
| 03. | நிரந்தர அறித்தல் பலகைகள் பொது இடங்களில் காட்சியளிக்கச் செய்தல் (01 சதுர அடி ஒரு வருடகாலம் காட்சியளிக்கச் செய்வதற்காக) | 250.00 |
| 04. | ஒளிரும் அறித்தல் பலகைகளைக் காட்சியளிக்கச் செய்தல் (01 சதுர அடி ஒரு வருடகாலம் காட்சியளிக்கச் செய்வதற்காக) | 350.00 |
| 05. | (i) பிரத்தியேக வகுப்புகள் தொடர்பான அறிவித்தல் பலகைகளை காட்சியளிக்கச் செய்தல் (01 சதுர அடி ஒரு வருடகாலம் காட்சியளிக்கச் செய்வதற்காக) | 350.00 |
| | (ii இலத்திரனியல் வியாபார அறிவித்தல் பலகையொன்றுக்காக (01 சதுர அடி ஒரு வருடகாலம் காட்சியளிக்கச் செய்வதற்காக) | 1000.00 |

*06. நகர சபையின் எல்லைக்குள் அங்கீகரிக்கப்பட்ட இடங்களில் காட்சியளிக்கச் செய்யப்படுகின்ற போஸ்டர் 01 இற்காக 50.00 ரூபா செலுத்தப்படல் வேண்டும்.*

*09 - 462*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.